*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*An international, peer-reviewed monthly academic research journal*
**ISSN: 3049-0723 (Online)**
**3107-7781 (Print)**

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p256-268** | Available online at: www.tamilmanam.in

*Original Research Paper*

# அகநானூற்றில் சீர்நிலை எதுகைத் தொடை மரபுகள்

Rhyme (Edukai) Alliteration/Rhyme Traditions in Metrical Structure (Sir-Nilai) in Agananuru

**இரா.கார்த்திகேயன்,**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர்-610005.
**R. Karthikeyan*,**
*Ph.D. Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur - 610005.*
*Email: karthikvijay9087@gmail.com*

**முனைவர் வெ.இரமேஷ்குமார்,**
நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், திருவாரூர்-610005.
**Dr. V. Rameshkumar,**
*Supervisor, Assistant Professor, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur - 610005.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 30-07-2026
Accepted: 04-08-2026

*Corresponding Author Email: *karthikvijay9087@gmail.com*

**Abstract:** From Tolkappiyam onwards, one can trace how Tamil prosody (grammar of poetic composition) has evolved over time. Among the essential elements of verse specified in prosody, Thodai (poetic harmony/rhyme) is one. Edukai Thodai (second-letter rhyming), which stands as one of the primary types of Thodai, serves as a vital element in bestowing acoustic richness to a poem. It highlights the musical and rhythmic beauty of a verse. This research paper explores how this Edukai Thodai, as manifested across metrical foot positions (Sir-Nilai) in the poems of Agananuru, acts as a foundation for earlier prosodic traditions while paving the way for later poetic conventions.

**Keywords:** *Tolkappiyam, Yappu (Prosody), Thodai (Poetic Harmony), Edukai (Second-Letter Rhyming), Agananuru.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் யாப்பிலக்கணமானது காலந்தோறும் வளர்ச்சி பெற்று வந்துள்ளதைத் தொல்காப்பியம் தொடங்கி காண முடிகிறது. யாப்பிலக்கணம் கூறும் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகத் தொடை அமைகிறது. தொடைகளில் முதன்மைத் தொடைகளில் ஒன்றாக விளங்கும் எதுகைத் தொடையானது செய்யுள் ஒலிநலன் பெற்று விளங்குவதற்கு முதன்மை உறுப்பாகச் செயல்படுகிறது. அது பாடலின் ஒலிநயச் சிறப்பினை உணர்த்தி நிற்கிறது. இவ்வாறு விளங்கும் எதுகைத் தொடையானது அகநானூற்றுப் பாடல்களில் சீர்நிலையில் முற்கால மரபுகளுக்கு அடிப்படையாகவும், பிற்கால மரபுகளுக்கு அடி கோலிட்டும் விளங்குகின்றன என்பதை ஆராயும் முகமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**திறவுச் சொற்கள்**

தொல்காப்பியம், யாப்பு, தொடை, எதுகை, அகநானூறு

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கியங்களுள் நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட இலக்கியங்களாகப் பாட்டும், தொகையுமாகிய சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. இவற்றுள் தொகை நூலாகிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக அகநானூறு அமைகின்றது. சங்க இலக்கியத்தில் அகத்திணை மற்றும் மக்களின் அகவாழ்வினைச் சித்தரிக்கின்ற நூல்களுள் ஒன்றாக அகநானூறு விளங்குகிறது. இவ்வாறு அகத்திணை பற்றிச் சிறப்பாகப் பேசக்கூடிய அகநானூற்றுப் பாடல்களில் யாப்பிலக்கணங்கள் கூறுகின்ற செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாக விளங்குகின்ற தொடைகளில் முதன்மைத் தொடைகளுள் ஒன்றாகிய எதுகைத்தொடை, சீர்நிலையில் முற்கால மரபுகளுக்கு அடிப்படையாகவும், பிந்தைய மரபுகளுக்கு அடிகோலிட்டும் எவ்வாறு அமைகின்றன என்பதை ஆராயும் முகமாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றது. மேலும் இவற்றுள் முற்கால மரபாகத் தொல்காப்பியமும், பிற்கால மரபாக யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் அமைகின்றன.

**தொடை**

செய்யுள் ஒலிநலன் பெற்று விளங்குவதற்கு முதன்மை உறுப்பாக தொடை அமைகிறது. அது பாடலின் ஒலிநயச் சிறப்பினை உணர்த்தி நிற்கிறது. தொடையின் சிறப்பைத் ***'தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்'*** என்ற கூற்றும் எடுத்துக்காட்டுகிறது. தொல்காப்பியர் கூறுகின்ற தொடை வகை இலக்கணங்களில் மோனைத்தொடைக்கு அடுத்தபடியாக எதுகைத்தொடை குறிப்பிடப்பெறுகிறது.

தொடைகளுள் எதுகையும் மோனையுமே முக்கியமான தொடைகளாகக் கருதப்படுகின்றன. அவற்றுள்ளும் எதுகைத்தொடை சிறப்பாக கருதப்பட்ட மையை ***"எதுகை***

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

***எனினும் தொடை எனினும் ஒக்கும்" (வீ.சோ.க.111 பெருந்.)*** என்னும் பெருந்தேவனார் கூற்றால் அறியமுடிகிறது.

**எதுகைத்தொடை வரையறை**

அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகை எனப்படும். இதுவே ஓரடியில் உள்ள சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது சீர் எதுகை அல்லது எதுகைத்தொடை விகற்பங்கள் எனப்படும். எதுகையின் பெயர்க் காரணத்தைப் பற்றி ***'எழுத்து எதிர்ப்படுதல் என்ற கருத்தில் எதிர் எது எதுகை என்று ஆகியிருத்தல் கூடும்'*** என்று சோ.ந. கந்தசாமி எடுத்துரைக்கிறார்.[1]

இலக்கண நூல்களில் முதன்மையாக விளங்கும் தொல்காப்பியம் எதுகையின் இலக்கணத்தை,

***"அஃதொழித் தொன்றின் எதுகை ஆகும் (தொல். செய்.நூ.89) எனக் குறிப்பிடுகிறது. 'முதல் எழுத்து ஒப்பது மோனை' என்று மோனைத் தொடைக்குரிய எழுத்தினை தெளிவாக சுட்டிய தொல்காப்பியர் எதுகைத் தொடைக்குரிய இரண்டாம் எழுத்தினைத் தெளிவாகச் சுட்டவில்லை. 'அஃதொழித் தொன்றின்' என்பதால் முதலெழுத்து அல்லாமல் அதற்கு அடுத்த எழுத்தான இரண்டாம் எழுத்து ஒன்றி நிற்குமேயானால் அது எதுகை எனப் பெயர் பெறும் என்ற இலக்கணம் உரைவழிப் பெறப்படுகிறது."***

எதுகையில் சீரினுடைய இரண்டாம் எழுத்து பொருந்தி வந்தாலும் அது முதலெழுத்தோடு இணைந்தே நோக்கப்படுகிறது. அதாவது ஓர் அடியில் உள்ள முதற்சீரின் முதலெழுத்து குறிலாக வந்தால் குறிலும், நெடிலாக வந்தால் நெடிலாகவும் வந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வந்தாலே அது எதுகையாகக் கொள்ளப்படும். இல்லையெனில் அது எதுகையாகாது. தமிழ் யாப்பியலில் சீரெதுகையும் இதே அடிப்படையில் நோக்கப்படுகிறது. இவற்றை விருத்தியுரைக்காரர்,

***"இரண்டாம் எழுத்து ஒன்றி வரினும், முதலெழுத்தெல்லாம் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து, 'பட்டு' என்பதற்கு 'கட்டு' என்பதல்லது, 'காட்டு' என்பது எதுகை ஆகாது; 'காட்டு' என்பதற்குப் 'பாட்டு' என்பதல்லது, 'பட்டு' என்பது எதுகை ஆகாது; 'அரம்' என்பதற்குப் 'பரம்' என்பதல்லது, 'பாரம்' என்பது எதுகை ஆகாது; 'பாரம்' என்பதற்குக் 'காரம்' என்பதல்லது, 'கரம்' என்பது எதுகை ஆகாது." (யா.வி.ப. 147)*** என்று விளக்குகிறார்.

**எதுகைத்தொடை வகைகள்**

எதுகைத்தொடையைத் தொல்காப்பியர் தொடங்கி காலந்தோறும் தமிழ் யாப்பிலக்கணிகளால் வகைப்படுத்தப்பட்ட எதுகைத் தொடையின் வகைகளைத் தொல்காப்பியர் சுட்டும் சீர்நிலை எதுகைத் தொடைகள், சங்கச் செய்யுட்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் வகுத்த பிந்தைய நூல்களான யாப்பருங்கலம், காரிகை

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

குறிப்பிடும் சீர்நிலை எதுகைத் தொடைகள் என இரண்டு நிலைகளில் பகுத்து கீழ்க்கண்டவாறு நோக்கலாம்.

| **தொல்காப்பியம்** (சீர்நிலை எதுகைத் தொடைகள்) | **யாப்பருங்கலம், காரிகை** (சீர்நிலை எதுகைத் தொடைகள்) |
|---|---|
| 1. பொழிப்பு<br>2. ஒரூஉ | 1. இணை<br>2. கூழை<br>3. மேற்கதுவாய்<br>4. கீழ்க்கதுவாய்<br>5. முற்று |

**அகநானூற்று எதுகைத்தொடை அமைப்புகள்**

அகநானூற்றுப் பாடல்களில் சீர்நிலை விகற்பத் தொடைகள் இயல்பாகவே பாடல்களில் அமைந்து பாடலுக்கு ஒலியழகைத் தருவனவாயுள்ளன. மேலும் அகநானூற்றில் ஒரு சில பாடல்களைத் தவிர பெரும்பாலான பாடல்களில் சீர்நிலை, விகற்பத் தொடைகள் பயின்றே வந்துள்ளன. சில பாடல்களில் பாடலின் ஓரிரு அடிகளைத் தவிர்த்து பாடல் முழுமையும் சீர்நிலை எதுகைத்தொடை பயின்று வருகின்ற தன்மையையும், அகநானூற்றுப் பாடல்களில் காண முடிகிறது.

***சீர்வகைத் தொடைகள்: முதற்சீரிலிருந்து இறுதிச்சீர் நோக்கியன***

ஒரு பாடலின் அடியில் உள்ள சீர்களில் பயின்று வருகின்ற தொடைகளைச் சீர்வகைத் தொடைகள் அல்லது தொடைவிகற்பம் எனலாம். சீர்வகைத் தொடைகளுள் இணை,பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய்,கீழ்க்கதுவாய்,முற்று ஆகிய ஏழு தொடைகளும் இடமிருந்து வலம் நோக்கிய அதாவது முதற்சீரில் இருந்து இறுதிச்சீர் நோக்கிய சீர்வகைத் தொடைகள் ஆகும்.

**இணை எதுகை (1,2 சீர்கள்)**

நான்கு சீர்களைக் கொண்ட ஓரடியில் முதலிரு சீர்களின் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது இணை எதுகை ஆகும். யாப்பருங்கலம், ***‘இருசீர் மிசைவரத் தொடுப்பது இணையே’ (யா.க.நூ.42)*** என்று இலக்கணம் கூறுகிறது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் இணை எதுகை அமைப்பானது 139 அடிகளில் பயின்று வந்துள்ளன.

***(எ.கா) தன்னோ ரன்ன ஆயமும் மயிலியல்***

***என்னோ ரன்ன தாயருங் காணக் (அகம், 385:1-2)***

மேற்கண்ட பாடல்களில் தொடர்ந்து இரண்டு அடிகளில் இணையெதுகை வந்துள்ளன.

**பொழிப்பு எதுகை (1,3 சீர்கள்)**

நான்கு சீர்களைக் கொண்ட அடியில் முதல் மற்றும் மூன்றாம் சீர்களில் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து எதுகையால் ஒன்றுவது பொழிப்பு எதுகை ஆகும். தொல்காப்பியம்,

***ஒருசீ ரிடையிட் டெதுகை யாயின்***

***பொழிப்பென மொழிதல் புலவர் ஆறே. (தொல், செய், நூ.94)***

என்று இலக்கணம் கூறியுள்ளது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் பொழிப்பு எதுகை அமைப்பானது 791 அடிகளில் பயின்று வந்துள்ளன.

***(எ.கா) மணப்பருங் காமம் புணர்ந்தமை அறியார்***

***தொன்றியல் மரபின் மன்றல் அயரப்***

***பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி (அகம்,112:15-17)***

இப்பாடலில் தொடர்ந்து மூன்றடிகளில் பொழிப்பு எதுகை வந்துள்ளமையைக் காணலாம்.

**ஒரூஉ எதுகை (1,4 சீர்கள்)**

ஒரூஉ எதுகை என்பது நான்கு சீர்களைக் கொண்ட ஓரடியில் முதற்சீரும் நான்காம் சீரும் எதுகையால் தம்முள் அளவொத்து ஒன்றுவது ஆகும். தொல்காப்பியம்.

***இருசீர் இடையிடின் ஒரூஉவென மொழிப (தொல், செய்.நூ.95)***

என்று இலக்கணம் கூறியுள்ளது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் ஒரூஉ எதுகை அமைப்பானது 554 அடிகளில் பயின்று வந்துள்ளன.

***(எ.கா) தருஞ்சுரக் கவலைய அதர்படு மருங்கின் (அகம்,17:17)***

அகநானூற்றில் ஒரூஉ எதுகை ஒரு பாடலில் ஓரீர் அடிகளில் மட்டும் வருதல், ஒரே பாடலில் பல அடிகளில் வருதல், தொடர்ந்து பல அடிகளில் வருதல் ஆகிய தன்மைகளில் அமைந்துள்ளது.

**கூழை எதுகை (1,2,3 சீர்கள்)**

நான்கு சீர்களைக் கொண்ட ஓரடியில் முதல் மூன்று சீரும் தம்முள் அளவொத்து எதுகையால் ஒன்றுவது கூழை எதுகை எனப்படும். யாப்பருங்கலம்,

***மூவொரு சீரும் முதல்வரத் தொடுப்பது***

***கூழை என்மனார் குறியுணர்ந்தோரே. (யா.க.நூ.45)*** என்று இலக்கணம் கூறியுள்ளது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் கூழைஎதுகை அமைப்பானது 17 அடிகளில் பயின்று வந்துள்ளன.

அகநானூற்றில் கூழை எதுகை பயின்று வருகின்ற தன்மையைக் காண முடிகின்றது.

***(எ.கா) வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும் (அகம்.74:13)***

***பெருந்தலை யெருவையொடு பருந்துவந் திறுக்கும். (அகம்.97:7)***

**மேற்கதுவாய் எதுகை (1,3,4 சீர்கள்)**

நான்கு சீர்களைக் கொண்ட ஓரடியில் முதற்சீரும், மூன்றாம் சீரும், நான்காம் சீரும் எதுகையால் தம்முள் அளவொத்து ஒன்றுவது மேற்கதுவாய் எனப்படும்.

***முதலியற் சீரொழித் தல்லன மூன்றில்***

***மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே. (யா.க.நூ.46)***

என மேற்கதுவாயின் இலக்கணத்தை யாப்பருங்கலம் குறிப்பிடுகிறது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் மேற்கதுவாய் எதுகை அமைப்பானது 27 அடிகளில் பயின்று வந்துள்ளன. அகநானூற்றுப் பாடல்களில் மேற்கதுவாய் எதுகை பயின்று வந்துள்ளமையைக் காண முடிகிறது.

***(எ.கா) வண்டுபடத் தகைந்த கண்ணி ஒண்கழல் (அகம்.1:1)***

***பரியுடைய நற்றேர்ப் பெரியன் விரியிணர்ப் (அகம்,100:12)***

**கீழ்க்கதுவாய் எதுகை**

நாற்சீர் அடியில் முதற்சீரும், இரண்டாம் சீரும், நான்காம் சீரும் தம்முள் அளவொத்து எதுகையால் ஒன்றுவது கீழ்க்கதுவாய் எதுகை ஆகும். இதனை யாப்பருங்கலம்,

***ஈற்றயற் சீரொழித் தெல்லாம் தொடுப்பது***

***கீழ்க்கது வாயின் கிழமைய தாகும். (யா.க. நூ.47)*** என்று இலக்கணம் கூறுகிறது. அகநானூற்றுப் பாடல்களில் உள்ள 6744 நாற்சீர் அடிகளில் கீழ்கதுவாய் எதுகை அமைப்பானது 18 அடிகளில் பயின்று வந்துள்ளன.

***(எ.கா) வல்லகொல் செல்லத் தாமே கல்லென (அகம். 17:10)***

***பெருங்கதவு பொருத யானை மருப்பின் (அகம்,26:6)***

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் கீழ்க்கதுவாய் பயின்று வந்துள்ளமையைக் காண முடிகிறது.

**முற்று எதுகை (1,2,3,4 சீர்கள்)**

நான்கு சீர்களைக் கொண்ட ஓரடியில் அனைத்துச் சீர்களும் தம்முள் அளவொத்து எதுகையால் ஒன்றுவது முற்று எதுகை எனப்படும். யாப்பருங்கலம்,

***'சீர்தொறும் தொடுப்பது முற்றெனப் படுமே' (யா.க. நூ.48)***

என்று இலக்கணம் கூறியுள்ளது. இவ்வமைப்பிலான எதுகை அகநானூற்றில் உள்ள 6,744 நாற்சீரடிகளுள் பயின்று வரவில்லை.

**அகநானூற்று சீர்நிலை எதுகைத் தொடைகளும் யாப்பு மரபுகளும்**

யாப்பிலக்கணம் கூறும் தொடையிலக்கண வரலாற்றில் இருவகை மரபுகள் காணப்படுகின்றன. இரண்டு வகை மரபுகளில் தொல்காப்பியம் முந்தைய மரபாகவும், இடைக்கால யாப்பிலக்கணமான யாப்பருங்கலமும், யாப்பருங்கலக் காரிகையும் பிந்தைய மரபாகவும் அமைகின்றன. இவற்றில் தொல்காப்பியம் சீர்நிலை விகற்பத் தொடைகளுள்

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

பொழிப்பு, ஒரூஉ ஆகியவற்றைச் சுட்டுகிறது. பிந்தைய மரபு யாப்பிலக்கணங்கள் தொல்காப்பியம் சுட்டிய சீர்நிலைத் தொடைகளோடு இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய்,முற்று ஆகியவற்றையும் சுட்டுகிறது. இவ்விருவகை மரபுகள் சுட்டுகின்ற சீர்நிலை எதுகைத் தொடைகளும் அகநானூற்றில் பயின்று வந்துள்ளன.

**முடிவுரை**

தொல்காப்பியம் தொடங்கி காலந்தோறும் தமிழ் யாப்பிலக்கணிகளால் பின்பற்றப்பட்டு வந்த எதுகைத்தொடை மரபுகளில் தொல்காப்பியம் சீர்நிலையில் கூறுகின்ற பொழிப்பு, ஒரூஉ எதுகையே அகநானூற்றில் மிகு எண்ணிக்கையில் காணப்படுகின்றன. பிந்தைய மரபுகளில் சீர்நிலையில் கூறப்படுகின்ற இணை, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய் ஆகியவையும் அகநானூற்றில் பயின்று வந்துள்ளன. மேலும் இவை தொல்காப்பியம் சுட்டுகின்ற சீர்நிலை எதுகைத்தொடை அளவிற்குப் பயின்று வரவில்லை என்றாலும் ஓரளவு பரவலாகக் காணப்படுகின்றன. பிந்தைய மரபுகளில் ஒன்றான முற்றெதுகை அகநானூற்றுப் பாடல்களில் பயின்று வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே சங்கத் தொகை நூல்களுள் ஒன்றான அகநானூறு பண்டைய மரபான தொல்காப்பியம் சுட்டுகின்ற எதுகைத் தொடைகளுக்கு அடிப்படையாகவும், பிந்தைய மரபான யாப்பருங்கலம், காரிகை சுட்டுகின்ற எதுகைத்தொடை மரபுகளுக்கு அடி கோலிட்டும் அமைகின்றன என்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. சோ.ந.கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதற்பாகம் முதற்பகுதி, ப.206, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**துணை நூல் பட்டியல்**

1. அமிர்தசாகரனார், யாப்பருங்கலம் பழைய விருத்தி உரையுடன், மே.வீ. வேணுகோபாலப்பிள்ளை(ப.ஆ), உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
2. அமிர்தசாகரர், யாப்பருங்கலக்காரிகை மூலமும் உரையும், ச.திருஞானசம்பந்தம், கதிர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2011.
3. தொல்காப்பியர், தொல்காப்பியம் உரை வளம், செய்யுளியல் தொகுதி (1,2,3,4), ஆ.சிவலிங்கனார்(ப.ஆ), உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு 1997, மறுபதிப்பு 2015.

4. வேங்கடசாமி, ந.மு, வேங்கடாசலம்பிள்ளை.ரா, அகநானூறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-18, முதற்பதிப்பு 1944.

**பிற்சேர்க்கை**

*சீர்நிலை எதுகை வகைகள்: முதற்சீரிலிருந்து கடைச்சீர் நோக்கியன.*

**இணை எதுகை – 139**

கழிமழை பொழிந்த பொழுதுகொள் அமையத்து (அகம்.13:13)

தண்கயம் நண்ணிய பொழில்தொறும் காஞ்சிப் (அகம்.25:3)

8:18,13:13,17:10,21:14,25:3,25:12,26:6,28:10,31:12,32:15,34:4,39:1,42:1,42:7,43:13,48:15,48:22,49:15,49:18,53:13,55:6,55:13,59:9,62:8,65:1,74:4,74:5,77:19,81:5,84:1,86:10,89:19,90:6,92:1,95:15,97:7,97:23,102:6,103:15,106:13,109:13,110:8,110:11,110:14,117:12,121:8,122:13,124:3,124:9,127:11,128:2,128:7,133:1,138:6,140:6,141:5,141:7,141:9,145:8,147:4,151:7,151:12,152:6,152:19,152:22,153:13,158:1,173:7,178:10,178:14,182:1,190:2,194:17,197:15,199:5,199:6,201:9,202:11,203:12,208:12,209:13,212:12,213:9,214:6,216;9,217:12,218:20,219:12,224:16,236:17,237:10,241:3,247:5,250:6,252:11,258:6,266:7,266:17,268:10,277:1,280:1,286:14,289:3,291:10,299:5,301:24,305:1,311:8,313:12,317:8,317:18,318:1,321:10,325:6,328:10,331:9,333:16,340:6,340:11,343:17,344:6,353:18,356:7,360:5,361:1,363:6,364:7,366:8,368:15,374:2,376:6,378:4,385:1,385:2,387:20,389:2,391:9,393:9,399:14.

**பொழிப்பு எதுகை-741**

புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை (அகம். 3:9)

மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்ப (அகம்.4:5)

3:9,4:4,4:5,4:11,4:14,5:3,5:10,5:11,5:17,5:18,5:25,6:10,7:6,7:7,7:10,7:16,7:20,9:19,9:26,10:3,10:11,11:2,11:4,11:6,12:7,12:8,12:12,13:20,13:24,14:8,14:9,14:11,14:19,14:21,15:19,16:11,16:14,17:12,17:19,18:6,18:8,19:4,19:5,19:12,19:15,19:17,19:19,20:10,21:21,21:25,22:3,22:7,22:9,22:10,23:3,23:4,23:11,24:14,24:15,25:1,25:5,25:7,25:19,27:4,27:8,29:17,30:4,31:1,31:

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

5,31:13,33:14,33:15,34:2,34:10,34:15,35:15,35:16,36:11,37:10,37:16,38:4,38:6,39:6,39:8,39:9,39:12,39:13,40:17,41:6,42:2,43:3,43:11,44:5,45:19,47:1,47:10,48:8,48:21,50:2,50:4,50:5,50:7,51:4,52:10,53:3,54:1,54:5,54:11,54:12,54:18,54:19,56:2,56:7,56:8,56:14,57:9,57:17,58:11,59:1,59:5,59:12,59:14,60:7,63:4,63:13,63:14,64:11,64:12,64:14,65:8,65:10,65:15,66:2,66:15,66:18,67:4,67:7,68:1,68:11,70:9,70:13,71:4,71:6,71:7,72:2,72:5,72:13,73:8,73:9,73:17.74:8,74:14,75:2,75:6,75:7,77:11,77:17,78:6,78:11,78:15,78:19,78:21,79:3,81:3,81:12,86:1,86:9,86:11,86:13,86:16,86:25,86:26,87:2,87:4,87:5,88:4,88:9,88:13,89:8,89:13,89:15,90:7,90:8,91:4,91:10,91:12,93:5,93:8,93:20,93:21,94:4,94:11,94:14,95:10,96:2,96:15,96:18,97:1,97:3,97:10,97:13,98:23,99:9,101:11,102:9,102:14,103:4,103:11,104:3,104:9,104:10,105:10,106:7,107:10,107:17,107:18,108:10,108:14,109:5,109:6,110:3,110:6,110:10,110:20,110:22,110:25,111:6,111:12,112:4,112:6,112:8,112:15,112:16,112:17,116:4,116:5,116:7,117:17,118:1,118:2,118:3,118:4,118:5,118:14,119:1,119:3,119:9,120:5,120:14,121:6,121:12,123:3,123:6,123:14,124:6,125:6,125:16,125:20,126:2,126:15,126:20,127:15,127:16,128:6,129:7,129:10,129:16,130:11,131:4,131:9,132:7,132:8,133:13,133:15,134:3,135:8,136:2,136:5,136:9,136:10,136:14,136:22,136:23,136:27,136:29,:137:1,137:8,138:10,138:14,139:5,139:19,140:4,141:20,143:6,143:7,144:12,145:5,145:13,146:5,146:10,147:16,149:2,149:4,149:13,149:15,149:16,149:17,151:11,151:13,152:12,152:13:152:21,155:10,155:12,155:13,155:14,156:1,156:8,156:9,157:7,159:1,159:6,159:8,159:14,159:15,159:17,160:5,160:13,160:14,161:10,161:12,163:5,163:6,164:10,165:1,167:3,167:9,167:10,167:11,167:12,167:13,167:16,168:3,168:8,169:14,170:6,170:7,170:11,170:12,172:6,172:14,172:15,173:3,173:14,173:15,174:2,176:5,176:22,177:7,177:11,177:12,178:3,178:7,178:9,178:12,178:15,179:7,179:8,180:5,180:6,180:7,180:11,180:12,181:6,181:9,181:23,181:26,183:3,183:9,183:12,184:3,185:13,186:10,187:9,187:12,188:1,188:4,188:5,190:1,190:11,190:14,190:15,191:8,191:14,191:15,192:7,193:4,193:10,194:8,194:11,194:15,195:1,195:2,196:10,198:8,198:9,198:10,198:12,199:8,200:8,203:5,203:14,2

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

04:9,205:9,206:11,207:5,207:7,207:15,208:14,209:3,210:11,211:13,

212:2,212:3,212:19,213:3,213:15,213:20,214:9,215:13,

216:5,216:12,216:13,217:5,217:20,218:6,219:5,219:8,219:9,219:10,221:3,221:10,223:4,223:5,223:12,224:1,224:18,227:6,227:14,227:16,227:20,228:10,230:3,230:7,230:9,231:3,231:12,233:3,233:4,233:8,234:1,234:2,234:4,234:6,234:8,234:9,234:14,234:18,235:3,235:5,235:6,235:10,235:13,235:16,235:19,236:12,239:5,239:7,240:6,241:8,241:12,242:15,243;2,244:4,244:6,244:9,244:12,245:2,245:5,245:12,247:6,247:10,248:8,248:9,249:6,249:11,249:17,249:19,250:2,250:3,250:5,250:7,250:10,250:12,251:7,252:4,252:5,253:17,253:22,254:3,254:7,254:9,255:8,255:17,256:12,256:14,256:15,256:19,257:1,258:9,259:15,260:9,261:6,262:16,262:18,263:8,264:5,265:6,265:4,266:18,268:11,268:12,268:14,269:19,271:13,272:2,272:7,272:9,272:17,274:5,274:9,275:2,275:3,275:4,275:7,275:9,275:13,275:15,275:19,279:15,280:5,280:10,280:12,281:9,283:13,283:15,283:17,284:10,285:8,285:9,285:13,286:8,286:9,286:12,287:7,288:4,288:7,288:9,288:10,288:11,288:12,288:14,288:16,289:4,289:6,289:11,290:5,290:9,290:13,290:14,291:5,293:3,295:9,295:17,296:11,296:14,297:5,297:17,298:7,298:9,298:10,300:1,300:2,300:15,300:18,300:22,301:9,301:14,301:18,302:10,303:5,303:14,304:1,304:17,305:9,305:14,306:2,306:5,307:7,307:10,309:15,309:17,310:8,312:4,312:12,313:8,314:4,314:7,314:15,314:20,315:6,317:6,317:11,317:17,317:20,319:10,320:1,321:6,321:15,324:2,324:6,324:13,325:4,325:20,326:6,327:5,328:2,328:13,329:2,329:10,330:6,331:10,332:6,333:7,333:9,333:10,333:15,335:6,335:7,335:8,335:26,336:14,336:21,337:16,337:21,338:9,338:11,338:13,338:17,340:2,340:19,342:1,342:9,343:1,343:2,343:3,343:5,343:6,343:8,343:11,343:14,345:12,345:16,345:17,346:7,346:14,346:19,346:20,347:5,347:6,347:10,347:13,348:7,348:12,349:7,349:10,351:4,351:9,351:11,351:12,351:14,352:1,352:2,352:7,352:12,352:15,353:12,353:17,354:4,354:10,356:2,356:6,356:8,356:19,356:20,357:11,358:5,358:6,358:9,360:2,360:6,360:15,361:3,361:8,361:9,361:10,363:1,363:2,367:1,367:2,367:7,367:12,368:3,368:9,368:13,368:

19,369:23,370:3,370:10,372:10,373:4,373:5,374:12,374:16,374:18,375:16,377:3,377:9,378:3,378:7,378:15,378:22,378:24,379:12,379:17,379:21,379:22,379:25,379:27,381:14,381:16,382:1,382:5,382:9,383:1,383:11,384:1,384:7,384:8,384:14,385:8,385:16,386:9,387:1,388:15,389:5,389:7,389:8,389:18,389:19,389:20,391:4,392:19,392:20,392:23,392:26,394:1,394:4,394:10,394:13,395:1,395:6,395:7,395:10,395:13,396:3,397:3,397:10,397:13,397:16,398:10,398:11,398:16,398:17,398:20,399:3,399:9,399:10,399:11,400:5,400:10.

**ஒரூஉ எதுகை-554**

கல்போல் பிரியலம் என்ற சொல்தாம் (அகம். 1:6)

மறந்தனர் கொல்லோ தோழி சிறந்த (அகம்.1:7)

1:6,1:7,1:8,1:9,3:2,3:13,4:1,4:3,4:8,5:6,5:7,5:16,5:26,7:9,7:17,8:5,8:8,8:14,11:7,14:12,14:18,17:17,18:14,19:2,19:8,19:9,20:9,20:11,20:14,21:7,21:8,21:10,23:1,23:7,23:10,24:11,25:17,25:18,25:20,26:9,26:20,26:23,27:1,27:5,27:6,27:14,29:2,29:9,29:12,30:12,31:7,32:11,32:14,33:4,33:10,33:18,34:1,34:16,35:11,36:17,36:19,37:1,37:6,37:12,37:14,38:3,38:7,38:11,38:12,38:16,39:7,40:7,41:2,42:11,44:3,44:4,44:12,45:15,47:4,47:6,48:12,48:16,50:10,51:10,52:11,52:13,53:8,54:3,54:14,54:15,55:9,58:4,58:9,61:1,61:16,63:12,64:1,64:13,65:2,65:7,66:5,66:8,66:13,66:16,66:21,67:3,67:16,68:3,68:14,69:2,70:8,71:1,71:10,72:7,72:10,72:19,72:22,73:10,75:14,75:19,77:3,77:10,78:16,79:2,79:10,79:11,81:6,83:9,83:12,86:28,88:2,88:8,91:9,94:6,94:12,96:1,98:28,99:3,99:7,100:5,100:13,101:1,101:2,101:15,103:10,103:13,104:4,104:11,106:8,107:3,107:12,107:19,108:1,108:2,108:12,109:1,110:17,110:21,110:23,111:13,113:11,115:10,116:5,116:12,117:5,118:6,118:9,118:11,119:7,119:10,119:15,121:3,122:19,123:5,123:7,124:5,124:7,124:13,126:17,126:19,127:6,127:9,127:12,128:1,128:3,132:9,134:1,134:5,136:3,136:4,136:8,136:26,138:8,138:11,139:16,141:2,141:4,141:24,143:5,145:2,145:10,146:7,146:11,147:12,148:9,148:10,148:12,150:1,153:3,154:13,155:11,159:3,159:7,159:18,160:3,160:15,160:16,161:7,161:8,161:9,163:10,163:12,165:9,167:18,268:2,168:11,169:5,169:11,170:

**DOI: https://doi.org/10.63300/tm12032026.22**

8,172:18,173:1,173:16,174:5,174:10,175:6,175:16,176:21,177:1,178:17,180:1,180:10,181:3,
181:22,182:6,183:4,183:10,184:16,185:10,188:8,189:4,189:10,189:12,189:13,190:13,191:12
,191:13,192:2,192:11,192:13,193:12,194:16,195:8,196:4,196:11,197:5,200:4,200:6,200:10,2
01:17,202:5,203:4,203:10,204:4,204:10,205:19,206:1,206:12,208:3,208:4,208:5,208:8,208:9
,208:18,208:22,209:1,209:10,210:4,212:16,213:11,213:19,213:24,214:5,214:8,215:7,216:1,2
17:18,222:13,223:3,223:10,223:11,224:2,224:4,224:13,225:6,225:7,226:5,227:3,227:5,227:7
,228:7,229:15,229:17,230:8,230:11,230:13,231:9,231:10,232:2,232:4,233:5,233:9,234:3,234
:5,235:2,235:4,237:3,237:5,237:6,237:8,237:11,238:16,240:7,240:9,241:2,241:7,241:11,242:
3,243:7,243:1,242:7,243:13,244:5,244:10,245:7,247:3,248:3,249:8,249:10,252:9,253:2,253:
8,253:20,254:18,255:7,257:18,258:3,259:5,260:8,260:10,260:11,260:12,261:3,261:5,261:12,
261:13,263:13,264:11,265:19,267:4,267:6,267:15,268:1,269:5,269:21,270:12,271:7,271:9,2
72:16,273:6,273:9,275:8,276:12,279:9,280:6,281:5,281:6,283:2,283:8,283:9,284:2,284:11,2
85:7,286:11,287:3,288:1,288:8,288:15,289:10,291:1,291:2,291:4,291:6,291:13,291:18,292:2
,292:4,292:7,295:10,296:7,298:3,299:13,299:18,300:6,300:10,300:11,301:4,301:13,301:21,3
04:13,305:6,307:6,310:11,311:2,311:5,311:12,312:10,313:7,313:9,314:9,314:13,315:15,317:
10,317:21,317:22,318:8,319:12,322:4,323:1,324:1,325:7,325:12,325:13,325:14,326:3,327:8,
327:17,328:7,328:11,329:7,329:8,330:9,332:7,332:11,333:4,333:5,333:13,333:18,335:9,335:
22,336:7,336:16,336:19,337:10,338:16,339:3,339:5,339:9,340:8,340:9,340:12,340:18,342:8,
342:10,343:15,343:16,344:1,344:7,345:5,345:11,345:14,345:18,346:6,346:17,347:1,348:1,3
48:6,350:3,350:9,351:15,353:3,353:6,353:11,353:15,353:16,354:3,354:8,354:9,354:12,355:5
,356:10,356:17,358:3,358:10,358:11,358:12,359:5,361:13,361:14,362:3,363:15,365:10,366:
2,367:14,368:12,369:10,369:11,369:12,370:9,371:6,374:9,375:3,375:6,375:12,376:12,377:2,
377:11,378:9,378:10,379:3,381:4,381:9,381:13,381:18,382:7,385:7,387:8,388:1,388:4,388:2

2,389:1,389:10,389:11:389:15,391:10,392:5,392:11,392:15,395:4,396:8,396:15,396:16,398:3,398:7,398:18,400:4

**கூழை எதுகை-17**

என்றூழ் நின்ற புன்தலை வைப்பில் (அகம்.21:14)

21:14,48:22,74:13,95:15,97:7,122:13,124:9,138:6,158:1,203:12,258:6,268:10,286:14,317:18,328:10,333:16,360:5.

**மேற்கதுவாய் எதுகை-27**

வண்டுபடத் ததைந்த கண்ணி ஒண்கழல் (அகம்.1:1)

1:1,21:6,44:9,48:1,56:3,61:9,77:2,91:3,97:14,99:8,100:12,101:3,111:5,120:12,153:12,191:3,199:19,227:15,231:11,272:6,320:10,321:13,345:10,360:17,385:11,389:22,390:7.

**கீழ்க்கதுவாய் எதுகை-18**

அளியரோ அளியர் தாமே அளிஇன்று (அகம்.43:13)

8:18,17:10,26:6,31:12,32:15,43:13,55:6,128:2,153:13,194:17,209:13,212:12,224:16,241:3,331:9,363:5,364:7,374:2,391:9.

## ஆசிரியர் கருத்து முரண்பாடின்மை அறிக்கை (Author Declaration of Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையை உருவாக்குவதிலும், தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதிலும், முடிவுகளை வெளியிடுவதிலும் எவ்வித நிதி சார்ந்தோ அல்லது தனிநபர் சார்ந்தோ கருத்து முரண்பாடுகள் (Conflict of Interest) எதுவும் இல்லை என ஆசிரியர் இதன்மூலம் உறுதியளிக்கிறார்.